**வெலிகெபொல பிரதேச சபை**
**இரத்தினபுரி மாவட்டம்**

---

## 01. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 ஏப்ரல் 08 ஆந் திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2015 மார்ச் 30 ஆந் திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 மே 23 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர, நிதிக்கூற்றுக்களில் 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு வெலிகெபொல பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயற்பாடுகளும் காசுப்பாய்ச்சல் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமை ஒன்றினை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) காசோலைகள் மதிப்பளிக்கப்படாத போது அப் பெறுமதி மீண்டும் அறவீடு செய்யும் வரை மதிப்பளிக்கப்படாத காசோலை கணக்கிற்கு வரவு வைக்கப்பட வேண்டும் எனினும், ரூபா 133,410 தொகை பெறுமதியான மதிப்பளிக்கப்படாத காசோலை முற்பணம் என கணித்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) வருமான விடய இலக்கம் 2.13 குப்பை வரி வருமானத் தலைப்பு தொடர்பாக மீளாய்வாண்டின் போது கிடைத்திருந்த ரூபா 144,000 இற்கான வருமான சிட்டையிடல் என கணக்கீடு செய்யப்பட வேண்டும். எனினும் ரூபா 95,500 தொகையினை மாத்திரம் கணக்கீடு செய்ததன் மூலம் ஆண்டிற்கான வருமானம் ரூபா 48,500 தொகையினால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டு தொடர்பாக செலுத்த முடியாதிருந்த ரூபா 85,814 இற்கான செலவுகள் குறிப்பிட்ட செலவுத் தலைப்பிற்கு மற்றும் கடன்கொடுத்தோருக்கு சீராக்கல் மேற்கொள்ளாமல் 2016 ஆண்டிற்கான செலவுக்கு சீராக்கல் செய்திருந்தமையால் மீளாய்வாண்டிற்கான செலவு மற்றும் பொறுப்புக்கள் அதே தொகையால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஈ) 2009 முதல் 2014 ஆண்டுகள் தொடர்பாக செலுத்த முடியாதிருந்த கூட்டுத்தொகை ரூபா 768,849 தொகைக்கான செலவுகள் குறிப்பிட்ட ஆண்டுகளின் போது கடன்கொடுத்தோருக்கு ஏற்பாடு செய்யாமல் மீளாய்வாண்டின் போது திரண்ட நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ளது.

(உ) மீளாய்வாண்டின் போது நன்கொடை ஒன்றாகக் கிடைத்திருந்த ரூபா 20,881,461 தொகை பெறுமதியான சொத்துக்கள் நன்கொடை ஒதுக்கமென குறிப்பிட்ட சொத்துக் கணக்குகளில் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

**1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்கு**

03 கணக்கு விடயங்கள் தொடர்பாக மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீதிகள் மற்றும் துணைப் பதிவேடுகளின் பிரகாரம் மீதிகளிடையே ரூபா 736,209 இற்கான வித்தியாசம் ஒன்று அவதானிக்கப்பட்டது.

**1.3.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணக்கமின்மை**

1988 ஆண்டு முதல் 2014 ஆண்டு வரை வழங்கப்பட்ட கூட்டுத்தொகை ரூபா 2,485,572 இற்கான முற்பணங்கள் இலங்கைக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை 371(2) தீர்மானத்தின் படி தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**02. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2015 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினை விஞ்சிய வருமானம் ரூபா 4,188,432 ஆகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 3,305,066 ஆகும்.

**2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு**

முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் நிதி செயற்பாட்டு மிகை ரூபா 883,366 இனால் அதிகரித்திருந்ததுடன் அது முன்னைய ஆண்டை விட 26.73 சதவீத அதிகரிப்பு ஒன்றென அவதானிக்கப்பட்டது. இதற்கு முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் வீதவரி மற்றும் வரி, குத்தகை, அனுமதிப்பத்திரக் கட்டணம், தண்டம் பணம் மற்றும் எழுத்தாணைக் கட்டணம், ஏனைய வருமானங்களில் முறையே 07 சதவீதம், 70 சதவீதம், 40 சதவீதம், 29 சதவீதம், 36 சதவீதமே அதிகரித்தலும் மற்றும் வழங்கள் உபகரணங்கள் மற்றும் போக்குவரத்து தொடர்பாடலின் 28 சதவீதம் 10 சதவீதம் குறைவடைதலும் முக்கியமாகப் பாதித்திருந்தது.

**2.3 வருமான நிருவாகம்**

**2.3.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்**

மீளாய்வாண்டிற்காக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம் உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம் பற்றிய தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| வருமான விடயம் | மதிப்பீட்டு | உள்ளவாறான | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு திரண்ட நிலுவை |
|---|---|---|---|
| | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 |
| வீத வரி மற்றும் வரி | 3,508 | 7,219 | 4,411 |
| வாடகை | 1,169 | 1,476 | 73 |
| அனுமதிப்பத்திரக் கட்டணம் | 731 | 1,203 | 58 |
| ஏனைய வருமானங்கள் | 55,470 | 35,054 | 6,196 |

### 2.3.2 வருமானம் சேகரித்தல் செயலாற்றுகை

மீளாய்வாண்டிற்கான மதிப்பீட்டு வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானத்துடன் இணக்கஞ் செய்யும் போது எழுத்தாணை மற்றும் தண்டப்பணம் மற்றும் ஏனைய வருமானங்கள் ஆகிய வருமான விடயங்களில் சேகரிக்கப்பட்ட வருமானம், பாதீட்டு அளவை விட முறையே 49 சதவீதம், 45 சதவீதம் குறைவடைதலை காட்டியது.

### 2.3.3 வீத வரி

(அ) 2015 செப்தெம்பர் 30 திகதியில் உள்ளவாறு வீதவரி மீதி ரூபா 2,437,106 ஆகக் காணப்பட்டதுடன் அவற்றில் ரூபா 5,000 இனை விட மிகையான நிலுவைகள் காணப்படும் 40 வீதவரி அலகுகளில் இருந்து ரூபா 276,412 தொகை அறவிடப்பட வேண்டியிருந்ததுடன், அவை மொத்த நிலுவைப் பெறுமதியில் 11% மாத்திரமே.

(ஆ) 2014 ஜனவரி 01 முதல் முன்னேறிய கிராமப் பிரதேசங்கள் என வெளியிப்பட்ட 09 கிராமங்களில் வீதவரி மதிப்பீடு செய்யப்பட்டு இருந்த போதிலும் அப் பிரதேசங்களுக்கு சபையினால் வழங்கும் வசதிகள் போதியளவானதாகக் காணப்படவில்லை என பிரதேசத்தில் வசிப்பவர்கள் விடுவித்த வேண்டுகோளினை கவனம் செலுத்தி விடயத்திற்கு பொறுப்பான அமைச்சரின் அங்கீகாரம் இன்றி சபையின் தீர்மானத்தின் பிரகாரம் அப் பிரதேசங்களில் வீத வரி பதிவழிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம், 2015 செப்தெம்பர் 30 திகதியில் உள்ளவாறு அப் பிரதேசங்களில் இருந்து ரூபா 901,602 இற்கான வீத வரி வருமானம் ஒன்றினை சபை இழந்திருந்தது.

### 2.3.4 ஏனைய வருமானங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஒரு வாராந்த சந்தையில் இருந்து மற்றும் 02 மீன் பலகைகளில் இருந்து 2009 ஆண்டு முதல் ரூபா 16,178 இற்கான நிலுவை மீதியொன்று காணப்பட்ட போதிலும் அந்த நிலுவைத் தொகையை தீர்ப்பதற்காக மீளாய்வாண்டு இறுதி வரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) சபைக்குச் சொந்தமான வாராந்த சந்தை மற்றும் மீன் பலகை வாடகைக்கு கொடுக்கும் போது பல வருட கால மாத பத்திரிகை மூலம் பகிரங்க கேள்வி அழைப்பு மேற்கொள்ளாமல் வரையறுக்கப்பட்ட கூறுவிலை மாத்திரம் கோரப்பட்டிருந்ததுடன், இந்த ஆதனங்களை கேள்வி பெறுமதியும் பல வருட காலம் முதல் மிகவும் குறைந்த பெறுமதியினால் மாத்திரம் அதிகரித்திருப்பதாகவும், கூடிய போட்டித் தன்மை ஒன்றினை வழங்கி கூடிய பெறுமதிக்கு ஆதனங்களை வாடகைக்கு வழங்குவதற்கு இருந்த இயலுமையை சபை இழந்துள்ளது என கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(இ) ஓப்பநாயக பொதுச் சந்தை இலக்கம் 01 முதல் 08 வரையான கடைகள் 1996 ஆண்டின் போது மாதாந்த வாடகை ரூபா 300 தொகை என தீர்மானித்து வாடகை கொடுத்திருந்ததுடன் எதுவித பெறுமதி மதிப்பீடும் இன்றி 2007 ஆண்டின் போது ரூபா 600 வரை வாடகையை அதிகரித்திருந்தது. இதன் பிரகாரம் வாடகைத் தொகை பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்ட பின்னர் தீர்மானிப்பதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. அத்துடன் ரூபா 600 வரை அதிகரிக்கப்பட்ட மாதாந்த வாடகை திருத்தத்தை உட்படுத்தி உடன்படிக்கை ஒன்று மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**2.3.5 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டு ஜனவரி 01 முதல் ஜூலை 30 தகதி வரை எம்பிலிபிட்டிய நீதிவான் நீதிமன்றில் இருந்து கிடைக்க வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 163,541 தொகை தொடர்பாக பட்டோலைகளைத் தறுவித்திருந்த போதிலும் அப் பணத்தை அறவீடு செய்வதில் தாமதம் காணப்பட்டது. மேலும், எம்பிலிபிட்டிய நீதிவான் நீதிமன்றில் இருந்து மீளாய்வாண்டு ஆகஸ்ட் முதல் மற்றும் பலங்கொட நீதிவான் நீதிமன்றில் இருந்து மீளாய்வாண்டு ஏப்ரல் முதல் நீதிமன்றத் தண்டப் பணத்தை இனங்காண்பதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் போது ஜனவரி 01 முதல் திசெம்பர் 31 வரை மாவட்ட காணிப் பதிவாளரிடம் கிடைக்க வேண்டிய முத்திரைக் கட்டணப் பட்டோலைகளைத் தருவித்து அப் பணத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**2.3.6 வர்த்தக அனுமதிப்பத்திரக் கட்டணம்**

முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் திசெம்பர் மாதம் வரை வர்த்தக அனுமதிப்பத்திரம் பெற வேண்டிய 82 நிறுவனங்களினால் வர்த்தக அனுமதிப்பத்திரம் பெற்றிருக்கவில்லை எனவும் 2015 ஆண்டின் போது வர்த்தக அனுமதிப்பத்திரம் மற்றும் வியாபார வரி வழங்கியிருந்த 62 நிறுவனங்களின் வருடாந்த வருமானப் பெறுமதி மதிப்பீடு மேற்கொள்ளப்படாமல் வர்த்தக அனுமதிப்பத்திரத்தின் பெறுமதி தீர்மானிக்கப்பட்டிருந்தது. வர்த்தக அனுமதிப்பத்திரம் அச்சிடப்பட்ட பற்றுச்சீட்டுடனான மீளாய்வாண்டிற்கான எழுதப்பட்ட 35 வர்த்தக நிறுவனங்களுக்கான வர்த்தக அனுமதிப்பத்திரம் கணக்காய்வுத் திகதியாகிய 2015 திசெம்பர் 18 திகதி வரை அந்த நிறுவனங்களுக்கு வழங்கியிருக்கவில்லை.

**03. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயற்பாட்டுத் திறமையின்மை**

ஹங்கானிவத்தை சந்தியில் இருந்து ஓபநாயக வரையான 03 கிலோ மீற்றர் வரையான பிரதான பாதையில் 80 அடிக்கும் 100 க்கும் இடைவெளியுடனான இந்த 250 வோட் மிகை வோல்டேஜ் உரிய 49 குரோபா தொகுதிகள் பொறுத்தப்பட்டிருந்தன. இது தொடர்பாக கஹவத்த மின்சார பொறியியலாளரினால் மேற்கொள்ளப்பட்ட எழுத்துமூல அறிவித்தலின் படி மின்சார சபையின் அங்கீகாரம் இன்றி மிகை இயலளவின் கொண்ட மின் குமிழ்கள் மின்சக்தி முறைமைக்கு சேர்ப்பதன் மூலம் பிரதேசத்தில் பொருத்தப்பட்டுள்ள 06 டிரான்ஸ்போமர் மிகை தாக்கம் ஏற்பட்டு செயலிழக்கக் கூடிய ஆபத்து நிலை ஒன்று ஏற்பட்டுள்ளது.

**3.2 ஒப்பந்த நிருவாகம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ)(i) அரசினால் செயற்படுத்தப்பட்ட ''வீட்டுக்கு வீடு ஊருக்கு ஊர்'' நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் சபையினால் செயற்படுத்தப்பட்டு நிர்மாணவேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்த 06 நிர்மாண வேலைகள் தொடர்பாக ரூபா 8,960,000 தொகையொன்று ஒப்பந்தக்காரர்களுக்கு செலுத்த வேண்டியிருந்த போதிலும் அந்தப் பணம் மீளாய்வாண்டு இறுதி வரை செலுத்தியிருக்கவில்லை. அத்துடன் அந்த நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் வேலை ஆரம்பிக்கப்பட்டிருந்த ரூபா 9,959,770 பெறுமதியான 05 நிர்மாணவேலைகள் கணக்காய்வுத் திகதி வரை வேலைகள் இடைநிறுத்தப்பட்டிருந்தது.

(ii) மேலும், 05 நிர்மாண வேலைகள் தொடர்பாக முற்பணமாகக் கிடைத்திருந்த ரூபா 1,694,488 இற்கான முற்பணம் ஒப்பந்த சாராருக்கு செலுத்தியிருந்த போதிலும், அவற்றில் 04 நிர்மாண வேலைகள் கணக்காய்வுத் திகதியளவில் வேலை நிறுத்தப்பட்டிருந்தது.

(ஆ) 2015 ஜூலை 07 திகதி 03 மாத காலத்திற்காக ரூபா 490,196 தொகைக்கான கிரயத்திற்கு உடன்படிக்கை மேற்கொண்டிருந்த மாகாண சபை நிதியேற்பாடுகளின் கீழ் செயற்படுத்தப்பட்ட மாதொல உஸாவிவத்த விளையாட்டுத் திடல் அபிவிருத்தி செய்யும் நிர்மாண வேலைகள் கணக்காய்வுப் பரிசோதனை சந்தர்ப்பமாகிய 2015 திசெம்பர் 22 திகதி வரை தரையின் மண்வெட்டப்பட்டு இடையிடையே சேற்றுக் கிடங்குகள் ஏற்பட்டிருந்ததெனவும், விளையாட்டுத் திடலில் ஓரத்தில் பாதுகாப்பற்ற மின்சாரக் கம்பி இழுக்கப்பட்டு காணப்பட்டதெனவும் ஒப்பந்த காலம் முடிவடைந்து 04 மாதங்களை விட மிகையான காலம் கடந்திருந்த போதிலும் நிர்மாண வேலை பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை எனவும் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(இ) உடன்படிக்கை பெறுமதி ரூபா 1,770,000 இற்கான ரூபா 394,000 இற்கான முற்பணம் ஒன்று வழங்கப்பட்டிருந்த தெற்கு ஹுனுவல பாலத்திற்கு அண்மையில் இருந்து பஹலவெல பாதையை தார்போட்டு அபிவிருத்தி செய்யும் நிர்மாண வேலைக்காக 04 அங்குல அளவு கற்கள் போடப்பட்ட நிலையில் அதிக மழை காரணமாக மேற்கூறிய பாதை வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டது என 2014 அக்தோபர் 03 திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீகப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்டது. எனினும் கணக்காய்வுத் திகதியாகிய 2015 திசெம்பர் 22 திகதி வரை அந்த நிர்மாண வேலையை மீண்டும் ஒழுங்கமைப்பது தொடர்பாக நடவடிக்கை ஏதும் எடுத்திருக்கவில்லை.

### 3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

**விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்படும் சொத்துக்கள்**

சபைக்குச் சொந்தமான இலக்கம் LF – 4847 கொண்ட மஹேந்திரா கப் வண்டி மற்றும் 53 – 5637 கொண்ட டபள் கப் வண்டி பயன்படுத்த முடியாத அளவு பழுதடைந்து இருந்த போதிலும், கணக்காய்வுத் திகதி வரை பழுதுபார்ப்பதற்கு அல்லது ஏலவிற்பனை செய்வதற்கு நடவடிக்கை எடுக்காமையினாலும் இலக்கம் RC – 6945 , RA – 7230 மற்றும் 270 – 2930 இலக்கம் கொண்ட மூன்று டிரக்டர் வண்டிகளையும் பழுதுபார்த்து பயன்படுத்தக் கூடிய நிலையில் காணப்பட்டும் கூட அந்த திருத்த வேலைகள் உரிய முறையில் மேற்கொள்ளப்படாமையால் இந்த வாகனங்கள் சபை வளவில் விளைவற்று நிறுத்தி வைக்கப்பட்டிருந்ததென கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

### 3.4 முறைசாராக் கொடுக்கல் வாங்கல்கள்

(அ) மல்மீகந்த நீர் செயற்திட்டம் நேர்கூலி அடிப்படையில் செயற்படுத்தியிருந்ததுடன் பெறுகைகள் செயற்பாடு இன்றி விலை குறைந்த நிறுவனத்தின் மூலம் அங்கீகாரம் ஏதும் இன்றி மற்றும் தொழிநுட்ப மதிப்பாய்வு ஒன்று இன்றி தர அறிக்கையொன்றும் பெற்றுக்கொள்ளாமல் 300 நீர்மானிகள் உட்பட பண்டங்கள் கொள்வனவு செய்வதற்காக 2014 ஆண்டின் போது ரூபா 1,368,975 தொகையொன்று செலவிடப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் போதும் ரூபா 445,000 இற்கான செலவொன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ஆ) மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சுச் செயலாளரின் 2010 ஆகஸ்ட் 17 ஆந் திகதிய சுற்றறிக்கையின் பிரகாரம் வீதி அலங்கரித்தல் தொடர்பான அறிவுரைகளுக்கு கவனம் செலுத்தாமல் ரூபா 810,000 தொகை பெறுமதியான 250 வோட் குரோபோ இன 70 தொகுதி வீதி விளக்குகள் மற்றும் 125 வோட் குரோபா வீதி விளக்குகள் 15 வும் தொழிநுட்ப அலுவலரின் விதப்புரை அல்லது சபையின்

அங்கீகாரம் இன்றி கேள்வி நடைமுறை ஒன்று இன்றி கொள்வனவு செய்யப்பட்டிருந்தது.

## 04. நல்லாளுகையும் கணக்களிப் பொறுப்பும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

27 செலவு விடயங்கள் தொடர்புடைய ரூபா 2,029,492 இற்கான மொத்த நிதியேற்பாடுகளும் எதுவித தேவைக்கும் பயன்படுத்தப்படாது காணப்பட்டது.

### 4.2 வருடாந்த பெறுகைகள் திட்டம்

மீளாய்வாண்டிற்காக வருடாந்த பெறுகைகள் திட்டம் தயாரிக்கப்பட்டு அதன் பிரகாரம் செயற்படுத்தியிருக்கவில்லை.

### 4.3 உள்ளகக் கணக்காய்வு

உள்ளகக் கணக்காய்வு அலகு ஒன்று நிறுவப்பட்டு அதற்கு வசதிகள் வழங்கி செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 4.4 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு அமுல் நடத்துதல்

கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு நிறுவி செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 05. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் தொடர்பாக விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) வருமான நிருவாகம்
(இ) சொத்துக்கள் முகாமைத்துவம்
(ஈ) ஒப்பந்த நிருவாகம்